ஆடக மதுரை அரசே போற்றி !! கூடல் இலங்கு குருமணி போற்றி !!

உ
சிவமயம்

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,

## மதுரை

## ஆவணி மூலத்திருவிழா அழைப்பிதழ்-2017

**18.08.2017 - 05.09.2017**



உலவாக்கோட்டை அருளியத் திருக்கோலத்தில் சுந்தரேசுவரர்

ஆடக மதுரை அரசே போற்றி !! கூடல் இலங்கு குருமணி போற்றி !!

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

## ஆவணி மூலத்திருவிழா அழைப்பிதழ்

**சித்தி விநாயகர்**

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெய
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தியானை தன்செய பொற்பாதமே

-பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

**சொக்கநாத வெண்பா**

உனக்குப் பணிசெய்ய உன்றனை எந்நாளும்
நினைக்க வரம் எனக்கு நீதா-மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநாதா.

-குருஞானசம்பந்தர்

**சுந்தரேசுவரர்**

சடைமறைத்துக், கதிர்மகுடம் தரித்து, நறுங்
கொன்றைஅம்தார் தணந்து, வேப்பந்
தொடைமுடித்து, விடநாகக் கலன் அகற்றி,
மாணிக்கச் சுடர்ப்பூண் ஏந்தி
விடைநிறுத்திக், கயலெடுத்து, வழுதிமரு
மகன்ஆகி, மீன நோக்கின்
மடவரலை மணந்துஉலகம் முழுதுஆண்ட
சுந்தரனை வணக்கம் செய்வாம்.

-பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

**தடாதகைப் பிராட்டியார்**

செழியர்பிரான் திருமகளாய்க், கலைபயின்று,
முடிபுனைந்து, செங்கோல் ஓச்சி,
முழுதுஉலகும் சயம்கொண்டு, திறைகொண்டு,
நந்திகணம் முனைப்போர் சாய்த்துத்,
தொழுகணவற்கு அணிமணமா லிகைசூட்டித்,
தன்மருடம் சூட்டிச் செல்வம்
தழைவுஉறுதன் அரசுஅளித்த பெண்ணரசி
அடிக்கமலம் தலைமேல் வைப்பாம்.

-பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

**பேரன்புடையீர்,**

tnhrce.org

வணக்கம். நிகழும் திருவள்ளுவர் ஆண்டு –2048, 1427–ஆம் பசலி, ஆவணி மாதம் 02–ஆம் நாள் முதல் ஆவணி மாதம் 20–ஆம் நாள் வரை ( 18.08.2017 முதல் 05.09.2017 வரை) ஆவணி மூலத்திருவிழா சீரும்சிறப்புமாக நடைபெற உள்ளது.

31.08.2017 ஆவணி மாதம் 15–ஆம் நாள் வியாழக்கிழமை இரவு 06.40 மணி முதல் 07.04 மணிக்குள் மீன லக்கனத்தில் சுவாமி சந்நிதி ஆறுகால் பீடத்தில் அருள்மிகு சுந்தரேசுவரருக்கு பட்டாபிஷேகம் நடைபெறும்.

02.09.2017 ஆவணி மாதம் 17–ஆம் நாள் சனிக்கிழமை பிட்டுத்தோப்பு மண்டபத்தில் பிற்பகல் 03.05 மணிக்கு மேல் 03.29 மணிக்குள் தனுர் லக்கனத்தில் பிட்டுக்கு மண்சுமந்த லீலையும், மண்சாத்துதலும் நடைபெறும்.

02.09.2017 பிட்டுத்திருவிழா அன்று காலையில் சுவாமி திருக்கோயிலில் இருந்து பிட்டுத்தோப்பிற்கு எழுந்தருளி பிட்டுத் திருவிழா முடிந்து திரும்ப திருக்கோயிலுக்கு வந்து சேரும் வரை திருக்கோயில் நடைசாத்தப்பட்டு இருக்கும்.

06.09.2017 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியும், திருவாதவூர் அருள்மிகு மாணிக்கவாசகர் சுவாமியும் புறப்பாடாகி திருக்கோயிலின் அலுவலக மண்டகப்படிக்கு எழுந்தருளி தீபாராதனை நடைபெறும்.

ஆன்மீக அன்பர்கள் அனைவரும் வருகைதந்து அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரின் திருவருளைப் பெற்றுஉய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கருமுத்து தி.கண்ணன்
தக்கார்

நா.நடராஜன்
இணை ஆணையர் / செயல் அலுவலர்

மா.கண்ணதாசன்
உதவி ஆணையர் / நேர்முக உதவியாளர்

ஆடக மதுரை அரசே போற்றி !! கூடல் இலங்கு குருமணி போற்றி !!

**18.08.2017 வெள்ளிக்கிழமை** (ஆவணி மாதம் 2-ஆம் நாள்)

# வாஸ்து சாந்தி

**19.08.2017 சனிக்கிழமை** (ஆவணி மாதம் 3-ஆம் நாள்)



கொடியேற்றம்

காலை 08.30 மணி முதல் 08.54 மணிக்குள்
கன்னியா லக்கனத்தில்

## கொடியேற்றம்.

மாலை:
சந்திரசேகரர் புறப்பாடு
ஆவணி மாதம் 03-ஆம் நாள்
சனிக்கிழமை முதல்
ஆவணி மாதம் 08-ஆம் நாள்
வெள்ளிக்கிழமை வரை
(19.08.2017 - 24.08.2017)

## சந்திரசேகரர் உற்சவம்

இரவு புறப்பாடு
கோயிலுக்குள்
இரண்டாம் பிரகாரம்



சந்திரசேகரர்

**24.08.2017 அன்று இரவு நான்கு ஆவணி மூலவீதிகளில், வீதி வாஸ்து சாந்தி.**

ஆடக மதுரை அரசே போற்றி !!

## முதலாம் திருநாள்

கூடல் இலங்கு குருமணி போற்றி !!

## 25.08.2017 வெள்ளிக்கிழமை (ஆவணி மாதம் 9-ஆம் நாள்)

காலை புறப்பாடு

காலை 09.00 மணி ஆவணி மூலவீதி, கோயிலுக்குள் குலாலர் மண்டபம்

வாகனம் – தங்கச்சப்பரம்

### திருவிளையாடல்

### கருங்குருவிக்கு உபதேசம் செய்தது



முற்பிறவியில் எவ்வளவோ புண்ணிய காரியங்கள் செய்திருந்தாலும் சிறிது பாவமும் செய்தமையால் ஒருவன் மறுபிறப்பில் கருங்குருவியாக பிறந்தான். அந்த கருங்குருவியைக் காகங்கள் மிகவும் துன்புறுத்தின. அவற்றிற்கு பயந்து கருங்குருவி நெடுந்தூரம் பறந்து சென்று ஒரு மரத்தின் கிளையில் தன் நிலையை எண்ணி வருந்தியபடி அமர்ந்தது.

அச்சமயம் அம்மரத்தின் கீழே ஒருசிலர் மதுரையைப் பற்றியும் பொற்றாமரைக் குளத்திலே நீராடி சோமசுந்தரரை வழிபட்டால் எண்ணியது நடக்கும் என்றும் உரையாடினர். கருங்குருவி அங்கிருந்து நேரே மதுரைக்கு வந்தது. பொற்றாமரைக் குளத்திலே நீராடி இறைவனை வணங்கியது. இறைவனும் அக்குருவியின் பக்திக்கு இரங்கி மிருத்யுஞ்சய மந்திரத்தை உபதேசித்தார். மேலும் கருங்குருவியின் இனத்தையே எளியான் என்னும் பெயர் மாற்றி வலியான் என வழங்கும்படி செய்தார்.

இரவு புறப்பாடு

இரவு 07.00 மணி ஆவணி மூலவீதி,

வாகனம்– சுவாமி: கற்பக விருட்சம் அம்மன்: வெள்ளி சிம்மவாகனம்

திருக்கோயிலின் சிறப்பு

உலகப்புகழ் பெற்ற இத்திருக்கோயில் சுமார் 17 ஏக்கர் பரப்பளவில் 2 தங்க விமானங்களுடன் 12 கோபுரங்களைக் கொண்டு அமைந்துள்ளது.

## ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி

அருள்மிகு முக்குறுணி விநாயகருக்கு 18படி அரிசியால் (மூக்குறுணி) செய்யப்பட்ட கொழுக்கட்டை நெய்வேத்தியம் படைக்கப்படும்.

ஆடக மதுரை அரசே போற்றி !! இரண்டாம் திருநாள் கூடல் இலங்கு குருமணி போற்றி !!

# 26.08.2017 சனிக்கிழமை (ஆவணி மாதம் 10-ஆம் நாள்)

காலை புறப்பாடு

காலை 09.00 மணி ஆவணி மூலவீதி, அம்மன் சன்னதி,
பூக்கடைத் தெரு வழியாக, ப.சி.முத்துச்செட்டியார் மண்டபம்

வாகனம்- தங்கச்சப்பரம்



திருவிளையாடல்

## நாரைக்கு முக்தி கொடுத்தல்

மதுரைக்குத் தெற்கே ஒரு தடாகத்தில் ஒரு நாரை வாழ்ந்து வந்தது. அக்குளத்தில் நீர் வற்றியதால் மற்றொரு குளத்திற்குச் சென்றது. அக்குளத்திலே முனிவர்கள் நீராடினர். அவர்கள் மேலே புரண்டு விளையாடிய மீன்களை உண்ணலாகாது எனக் கருதி உண்ணாமலே இருந்தது.

அம்முனிவர்களின் உரையாடலால் மதுரையைப் பற்றி அறிந்த நாரை மதுரைக்கு வந்து பொற்றாமரைக் குளத்திலே நீராடி இறைவனை வணங்கி முக்திப் பேறு பெற்றது. மேலும் அந்த நாரை இறைவனிடம் பொற்றாமரைக் குளத்திலே நீர்வாழ் உயிர்கள் எதுவும் இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால், மற்றப்பறவைகள் அதனை உண்ணக் கூடும். அதனால் பாவம் வந்து சேரும். எனவே நீர்வாழ் உயிரினங்கள் எதுவும் இருக்ககூடாது என்று வரம் வாங்கியது. நாரைக்கு இறைவன் அருளிய வரத்தின்படி இன்று வரை இக்குளத்தில் நீர்வாழ் உயிரினங்கள் எதுவும் இல்லை என்பது கருதற்குரியது.

இரவு புறப்பாடு

இரவு 07.00 மணி பூக்கடை தெரு, கீழமாரட் வீதி, அம்மன் சன்னதி, ஆவணி மூலவீதி,

வாகனம்- சுவாமி: பூதவாகனம் அம்மன்: அன்னவாகனம்

திருக்கோயிலின் சிறப்பு

சுவாமி சன்னதியில் கி.பி. 1165-1175 ஆண்டில் குலசேகரபாண்டிய மன்னரால் கட்டப்பெற்ற மூன்று நிலைகள் கொண்ட கோபுரம் இத்திருக்கோயிலின் ஆதி கோபுரம் ஆகும். இதனைப் புண்ணிய கோபுரம் என்றும் அழைப்பர்.

ஆடக மதுரை அரசே போற்றி !!

## மூன்றாம் திருநாள்

கூடல் இலங்கு குருமணி போற்றி !!

## 27.08.2017 ஞாயிற்றுக்கிழமை (ஆவணி மாதம் 11-ஆம் நாள்)

காலை புறப்பாடு

காலை 09.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணிக்குள்

கீழச்சித்திரைவீதி, தெற்காவணி மூலவீதி, காசுக்கார செட்டியார்கள் மண்டபம், கான்சாமேட்டுத் தெரு, தெற்கு மாசி வீதி, பாண்டிய வேளாளர் தெரு, தெற்கு வெளி வீதி, ஒண்டிமுத்துபிள்ளை மண்டபம்

வாகனம்– தங்கச்சப்பரம்

### திருவிளையாடல்

### மாணிக்கம் விற்றது



வீரபாண்டியன் நீதியுடன் ஆட்சி புரிந்தான். அவனுக்கு ஒரு ஆண்மகவு பிறந்தது. ஒரு சமயம் வேட்டையாடச் சென்ற அரசன் புலிக்கு இரையாகி இறந்தான்.

அவ்வமயம் அரசனது காமக்கிழத்தியரின் மக்கள் அரண்மனைக்குள் புகுந்து சகல செல்வங்களையும், மணிமகுடத்தையும் கவர்ந்து சென்றனர். இளவரசனுக்கு முடிசூடாலம் என்று அமைச்சர்கள் முடிவு செய்தனர். மணிமகுடம் முதலானவை களவு போனதை அறிந்து சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட எண்ணி திருக்கோயிலுக்குச் சென்றனர்.

அப்போது சோமசுந்தரப் பெருமானே ஒரு நவரத்தின வியாபாரியாகத் தோன்றி அங்கு வந்து நடந்ததைக் கேட்டறிந்து புதிய மணிமகுடம் செய்ய விலையுயர்ந்த நவமணிகளைக் கொடுத்து, அம்மணிகளின் வரலாறு, குணம், குற்றங்கள், யார் எந்த மணியை அணிய வேண்டும் போன்ற செய்திகளையும் கூறினார். புதிய மகுடத்தை சூட்டி இந்த குமாரனை அபிடேகபாண்டியன் என்று அழையுங்கள் என்று கூறி மறைந்தார்.

கவர்ந்து செல்லப்பட்ட செல்வங்களும், மணிமகுடமும் மீண்டும் கிடைக்கப் பெற்று நலமுடன் வாழ்ந்தார்கள். அபிடேகப் பாண்டியனும் செங்கோல் வழுவாமல் ஆட்சி புரிந்தான்.

### இரவு புறப்பாடு

இரவு 07.00 மணி பாண்டிய வேளாளர் தெரு, மேலமாசிவீதி, மேல, வடக்கு, கீழஆவணி மூலவீதி வழியாக திருக்கோயிலுக்கு வந்து சேருதல்,

### வாகனம்

சுவாமி: கைலாசபர்வத வாகனம்

அம்மன்: காமதேனு வாகனம்

ஆடக மதுரை அரசே போற்றி !!

# நான்காம் திருநாள்

கூடல் இலங்கு குருமணி போற்றி !!

## 28 .08.2017 திங்கட்கிழமை (ஆவணி மாதம் 12-ஆம் நாள்)

காலை புறப்பாடு

காலை 09.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணிக்குள்

தருமிக்குப் பொற்கிழி அளித்த லீலை முடிந்து ஆவணி மூலவீதி சுற்றி கோயிலுக்குள் வந்து மீனாட்சி நாயக்கர் மண்டபத்தில் தங்கல் பின், சித்திரை வீதி, கீழப்பட்டமார் தெரு, வழியாக வடக்கு ஆவணி மூலவீதி ராமசாமி பிள்ளை மண்டபம்

### திருவிளையாடல்

### தருமிக்குப் பொற்கிழி அளித்தது

வங்கிய சூடாமணி பாண்டியன் இறைவனுக்குப் பூசை செய்ய நறுமணமிக்க செண்பக மரங்களை தன் நந்தவனத்தின் வளர்த்து வந்தான். இளவேனிற் காலத்தில் அரசியும் அருகிலிருக்க நந்தவனத்திலே உன்னதமான ஒரு புதிய வாசனையை உணர்ந்தான். மன்னன். அது தன் தேவியின் கூந்தலில் இருந்து வருவதாக உணர்ந்த அவன் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உள்ளதோ? என்று சந்தேகம் கொண்டான்.

தன் ஐயத்தை நீக்குபவருக்குக் கொடுப்பதாக கூறி ஆயிரம் செம்பொன் கொண்ட ஒரு கிழியைச் சங்க மண்டபத்திலே தொங்க விட்டான். பல புலவர்கள் தங்கள் மனதில் தோன்றியதைப் பாடினார்கள். அரசனின் ஐயம் தீரவில்லை.

தருமி என்ற ஆதிசைவ பிரம்மசாரி ஒருவன் சொக்கநாதரைப் பூசிக்க விரும்பினான். மணமான பிறகே பூசிக்கலாம் என்பதால் தனக்கு அந்த பரிசை கிடைக்கும்படி செய்தால், அப்பொருளைக் கொண்டு தானும் மணம்புரிந்து, இறைபணி செய்யலாம் எனக்கருதி, இறைவனிடம் வேண்டினான். இறைவனும்

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீ அறியும் பூவே"

என்ற செய்யுள் எழுதப்பட்ட ஓலையினை அவனுக்கு வழங்கினார்.



தருமியும் சங்கத்திற்குச் சென்று அச்செய்யுளினைப் படித்துக் காட்ட, அரசன்தன் சந்தேகம் தீர்ந்ததாகக் கூறி அப்பொற் கிழியைத் தருமிக்கு அளிக்க உத்தரவிட்டான். நக்கீரர் அதனைத் தடுத்தார். தருமி இறைவனிடம் ஐயனே! உன் பாட்டில் குற்றம் கூறினால் யார் உன்னை மதிக்க வல்லவர்? என்று புலம்பி வருந்தினான்.

இறைவன் ஒரு புலவர் வடிவத்தில் சங்க மண்டபத்திற்கு வந்தார். தன் செய்யுளில் என்னகுற்றம் என்று வினவ, நக்கீரரும் பொருட்குற்றம் உள்ளது எனகூறினார். இருவருக்குமிடையே வாதம் தொடர இறுதியாக இறைவன் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டினார். இறைவனே வந்திருக்கிறார் என்று அறிந்த பின்னரும் நக்கீரர் பொருட்குற்றம் உள்ளது, என வாதாட இறைவன் தன் நெற்றிக் கண்ணை திறக்க, நெற்றிக் கண்ணின் வெப்பம் தாளாமல் பொற்றாமரைக் குளத்தில் நக்கீரர் விழுந்தார். இறைவனும் மறைந்தார்.

இவ்வாறு நக்கீரரின் தமிழ்ப் புலமையை உலகுக்கு உணர்த்திய இறைவன் மற்ற புலவர்களின் வேண்டுதலுக்கிரங்கி பொற்றாமரைக் குளத்திலிருந்து நக்கீரனை உயிர்ப்பித்துக் கொடுத்தார். நக்கீரரும் பொற்கிழியைத் தருமிக்கே கொடுக்கும்படிச் செய்தார்.

வாகனம்– தங்கச்சப்பரம்

**இரவு புறப்பாடு: இரவு 08.00 மணி வடக்கு, கீழஆவணி மூலவீதி வழியாக திருக்கோயிலுக்கு வந்து சேருதல்.**

**வாகனம்– சுவாமி: தங்கச்சப்பரம் அம்மன்: யானை வாகனம்**

ஆடக மதுரை அரசே போற்றி !! **ஐந்தாம் திருநாள்** கூடல் இலங்கு குருமணி போற்றி !!

## 29.08.2017 செவ்வாய்க்கிழமை (ஆவணி மாதம் 13-ஆம் நாள்)

காலை புறப்பாடு

காலை 10.00மணி ஆவணி மூலவீதி, கோயிலுக்குள் கருப்பண பிள்ளை மண்டபம்

வாகனம்– தங்கச்சப்பரம்

திருவிளையாடல்

## உலவாக் கோட்டை அருளியது

அடியார்க்கு நல்லார் என்ற ஒரு அடியார் மதுரையில் தினமும் சிவனடியார்களுக்கு உணவளித்த பிறகே உண்பது என்ற கொள்கை உடையவராக இருந்தார். அவரது செல்வம் வற்றிய போதும் கடன் பெற்றாவது தனது கடமையை ஆற்றி வந்தார். கடனும் கிடைக்காத நிலையில் அவர் தனது மனைவியுடன் சோமசுந்தரரைத் தரிசித்துப் பின் உயிர் நீப்பதென்றெண்ணி கோயிலுக்குச் சென்றார்.

அவரது தருமநெறியின் உண்மை நிலை கண்ட இறைவன் அசரீரியாகத் தோன்றி வீட்டிற்குச் செல்! அங்கே உனக்காக அள்ள அள்ளக் குறையாத நெல்மணிகளைக் கொண்ட உலவாக் கோட்டை ஒன்றை அளித்துள்ளோம் என்று கூறினார். அதன்படியே இருவரும் வீடு திரும்பி உலவாக் கோட்டை மூலம் கிடைத்த நெல்மணிகளைக் கொண்டு கடைசி காலம் வரை சிவனடியார்க்கு உணவளித்து வாழ்ந்தனர்.



இரவு புறப்பாடு: இரவு 07.00 மணி ஆவணி மூலவீதி,

வாகனம்– சுவாமி: நந்திகேசுவரர் வாகனம் அம்மன்: யாளி வாகனம்

திருக்கோயிலின் சிறப்பு

இத்திருக்கோயிலின் ஒன்பது நிலைகொண்ட மேற்குக் கோபுரம் கி.பி.1323–ஆம் ஆண்டு பராக்கிரம பாண்டியனால் கட்டப் பெற்றது.

ஆடக மதுரை அரசே போற்றி !! ஆறாம் திருநாள் கூடல் இலங்கு குருமணி போற்றி !!

# ஆறாம் திருநாள்

## 30.08.2017 புதன்கிழமை (ஆவணி மாதம் 14-ஆம் நாள்)

### காலை புறப்பாடு

காலை 10.00 மணி மீனாட்சி நாயக்கர் மண்டபத்தில் பாணனுக்கு அங்கம் வெட்டிய லீலை முடிந்தபின், ஆவணி மூலவீதி சுற்றிவந்து, கோயிலுக்குள் மீனாட்சி நாயக்கர் மண்டபத்தில் சிவகங்கை எஸ்டேட் ஆவியூர் கட்டளை மண்டபம்,

வாகனம் – தங்கச்சப்பரம்

### திருவிளையாடல்

## பாணனுக்கு அங்கம் வெட்டியது



குலோத்துங்க பாண்டியன் காலத்தில் பாணன் என்ற ஒரு வயது முதிர்ந்த வாள்வித்தை ஆசிரியர் வாழ்ந்து வந்தார். அவரது சிஷ்யர்களில் சித்தன் என்னும் ஒருவன் மிகவும் தீய குணங்கள் கொண்டவன். பயிற்சி முடித்து சென்ற அவன் தானும் ஒரு பயிற்சி பள்ளி அமைத்து ஆசிரியரின் மாணவர்களையெல்லாம் அங்கு அழைத்துக் கொண்டான். அத்தோடு ஆசிரியரின் மனைவியிடமும் தவறாக நடக்க முயற்சித்தான். இதனை அவள் சோமசுந்தரரிடம் முறையிட்டாள்.

இறைவனும் ஆசிரியர் வேடம் தாங்கிச் சென்று சித்தனை வாட்போருக்கு அழைத்து, ஆசான் மனைவியை நினைத்த நெஞ்சையும், பேசிய நாக்கையும், அந்தம்மாளைத் தொட்ட கைகளையும், கண்ட கண்களையும், காத்துக் கொள் என்று கூறி ஒவ்வொரு அங்கமாக வெட்டி, இறுதியாக அவன் தலையையும் வெட்டிக் கொன்றார். இச்செய்திகளை அறிந்த குலோத்துங்க பாண்டியன் ஆசிரியருக்குத் தக்க மரியாதைகள் செய்து கௌரவித்தார்.

### இரவு புறப்பாடு

இரவு 07.00 மணி ஆவணி மூலவீதி

வாகனம்– சுவாமி: தங்க ரிஷப வாகனம் அம்மன்: வெள்ளி ரிஷப வாகனம்

மாலை 06.00 மணிக்கு யானை மஹாலுக்கு முன்பு அருள்மிகு திருஞானசம்பந்த சுவாமிகள் சைவசமயத்தை நிலை நிறுத்திய ( சைவ சமய ஸ்தாபித வரலாறு ) வரலாற்று லீலை தலஓதுவாரால் சொல்லப்பட்டு, பின் ஆவணி மூலவீதி எழுந்தருளல்

ஆடக மதுரை அரசே போற்றி !! **ஏழாம் திருநாள்** கூடல் இலங்கு குருமணி போற்றி !!

## 31.08.2017 வியாழக்கிழமை (ஆவணி மாதம் 15-ஆம் நாள்)

காலை புறப்பாடு

காலை 11.00 மணி ஆவணி மூலவீதி, மேலமாசிவீதி,
இன்மையிலும் நன்மை தருவார் கோயிலில் சிவகங்கை எஸ்டேட் ஆவியூர் கட்டளை மண்டபம்,

வாகனம்– தங்கபல்லக்கு

திருவிளையாடல்

## வளையல் விற்றது

தாருகாவனத்து ரிஷிகள் தங்கள் மனைவியரே கற்பில் சிறந்தவர்கள் என்று செருக்குற்றிருந்தனர். அச்செருக்கை அடக்க எண்ணிய சொக்கநாதர் பிட்சாடனர் கோலத்தில் தாருகாவனத்திற்குச் சென்றார். பிச்சையிட வந்த அத்தனை ரிஷிபத்தினிகளும் அவரது அழகிலே மயங்கி ஆடைகளையும் அணிகலன்களையும் நெகிழ்ந்து நின்றனர். கோபமுற்ற ரிஷிகள் அப்பெண்களை மதுரையிலே சாதாரண வணிகர் குலப் பெண்களாக பிறக்கும்படி சபித்தனர். தங்கள் தவறையுணர்ந்து சாபவிமோசனம் கேட்ட, பத்தினிகளுக்கு இறைவனே வந்த உங்கள் கைகளிலே வளையல் சூடுவார். அப்பொழுது உங்கள் சாபம் தீர்ந்து எங்களை வந்தடைவீர்கள் என்றுரைத்தனர்.

அவ்வாறே ரிஷிபத்தினிகளும் செட்டிப் பெண்களாக மதுரையிலே பிறந்து வளர்ந்தனர். இறைவனும் வளையல் வியாபாரியாக அத்தெருவிலே வந்து, அவர்கள் கைகளைத் தொட்டு வளையல் அணிவிக்க அவர்களும் சாபம் தீர்ந்து சிவலோகம் சென்றனர்.



மாலை புறப்பாடு

மாலை 04.00 மணிமேலமாசி வீதி, மேலக்கோபுர தெரு,
தானப்ப முதலியார் அக்ரஹாரம், வடக்கு ஆவணி மூலவீதி

வாகனம்– சுவாமி: தங்கப்பல்லக்கு அம்மன்: தங்கப்பல்லக்கு

சுவாமி கோயிலுக்குள் வந்தவுடன் இரவு 06.40 மணி முதல் 07.04 மணிக்குள் மீன லக்கனத்தில் சுவாமி சந்நிதி ஆறுகால் பீடத்தில் அருள்மிகு சுந்தரேசுவரருக்கு பட்டாபிஷேகம். அருள்மிகு சுந்தரேசுவரரிடம் இருந்து திருக்கோயில் தக்கார் திரு.கருமுத்து தி.கண்ணன் அவர்கள், செங்கோலைப் பெற்று சகல விருதுகளுடன் சுவாமி சந்நிதி 2–ஆம் பிரகாரம் வலம் வந்து அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கரத்தில் சேர்ப்பிக்கும் காட்சியைக் கண்டு இறையருள் பெற்றுய்ய வேண்டப்படுகிறது.

ஆடக மதுரை அரசே போற்றி !! 

# எட்டாம் திருநாள்

கூடல் இலங்கு குருமணி போற்றி !!

## 01.09.2017 வெள்ளிக்கிழமை (ஆவணி மாதம் 16-ஆம் நாள்)

காலை புறப்பாடு

காலை 10.00 மணி ஆவணி மூலவீதி, கோயிலுக்குள் திருக்கல்யாண மண்டபத்தில்
செல்லப் பெருமாள் பிள்ளை மண்டபம்

வாகனம்- தங்கச்சப்பரம்



நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும்
பெருந்துறையாய்!

அரியபொருளே அவிநாசி யப்பாபாண்டி வெள்ளமே.
தெரிய அரிய பரஞ்சோதீ செய்வதோன்றும் அறியேனே.

திருவிளையாடல்

## நரியைப் பரியாக்கியது

மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் தென்னவன் பிரம்மராயன் என்ற பட்டத்துடன் அமைச்சராக பணியாற்றி வந்தார். மன்னன் படைக்குக் குதிரைகள் வாங்குவதற்காக பெரும்பொருளுடன் மாணிக்கவாசகரை அனுப்பினார். திருப்பெருந்துறை என்னும் தலத்தை அடைந்தவுடன் இறைவனைக் குருவாகப் பெற்ற மாணிக்கவாசகர் அங்கே சிவாலய திருப்பணி, சிவனடியார் திருப்பணி என முழுப் பொருளையும் செலவிட்டார்.

அரசனிடமிருந்து அழைப்பு வரவும் வெறுங்கையாக இருந்த மாணிக்கவாசகர் செய்வதறியாது இறைவனைத் தொழுதார். இறைவனும் ஆவணி மூலத்தன்று குதிரைகள் வந்து சேரும் என்று கூறும்படி பணித்தார். ஆவணி மூலத்திருநாளும் வந்தது. குதிரைகள் வராதது கண்டு மன்னன் மாணிக்கவாசகரை சிறையில் அடைத்துத் துன்புறுத்தினான். மாணிக்கவாசகர் இறைவனிடம் முறையிட, இறைவன் காட்டிலுள்ள நரிகளை எல்லாம் குதிரைகளாக்கி, சிவகணங்களைக் குதிரை பாகர்களாக்கி, தானே தலைவனாக ஒரு குதிரையின் மீதேறி மதுரைக்கு வந்தடைந்தார். அரசனும் மகிழ்ந்து மாணிக்கவாசகரைப் பாராட்டினான். ஆனால் அன்றிரவே அந்த குதிரைகள் மீண்டும் நரிகளாக மாறி அங்கிருந்த குதிரைகளைக் கொன்றுவிட்டு காடுநோக்கி ஓடின. மாணிக்கவாசகரை தண்டிக்கப் புகுந்த அரசன் அவரைக் கட்டி சுடுமணலில் கிடக்கச் செய்தான். இறைவன் அவரைக் காக்கும் பொருட்டு வையையாற்றில் வெள்ளப் பெருக்கெடுக்கச் செய்தார்.

இரவு புறப்பாடு

மாலை 06.00 மணிக்கு மண்டபத்திலிருந்து புறப்பட்டு கோயிலுக்குள் வடக்கு ஆடி வீதியில் உள்ள பதினாறுகால் மண்டபத்தில் குதிரை கயிறு மாறிக்கொடுத்த லீலை முடித்து விடி வகையறா திருக்கண் முடிந்த பின் இரவு 08.00 மணி ஆவணி மூலவீதி

வாகனம்- சுவாமி: தங்கக்குதிரை வாகனம் அம்மன்: தங்கக்குதிரை வாகனம்

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியும், திருவாதவூர் அருள்மிகு மாணிக்கவாசகர் சுவாமியும் மதுரைக்கு வருகை.

ஆடக மதுரை அரசே போற்றி !!

# ஒன்பதாம் திருநாள்

கூடல் இலங்கு குருமணி போற்றி !!

## 02.09.201 சனிக்கிழமை (ஆவணி மாதம் 17-ஆம் நாள்)

காலை புறப்பாடு

காலை 06.00 மணிக்கு நான்கு சித்திரை வீதி, கீழமாசி வீதி, யானைக்கல் வழியாக அருள்மிகு பழைய சொக்கநாத சுவாமி கோயிலின் முன், மதுரையில் உள்ள விருதுநகர் இந்து நாடார்கள் உறவின்முறை பரிபாலன சபை திருக்கண் மண்டபம், குருசாமி சாஸ்திரிகள் திருக்கண் மண்டபம், மகாலிங்கய்யர் திருக்கண் மண்டபம், ஸ்ரீ சாரதா சமதி, ஸ்ரீ சாரதா வித்தியாவனம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி திருக்கண்மண்டபம், பிட்டுத் தோப்பு வாணிய வைசியர் மண்டபம், பிட்டுத் தோப்பு லீலை முடித்து, இராமநாதபுரம் சமஸ்தான சேதுபதி மண்டபத்தில் தங்கல்



### வாகனம்– வெள்ளி சிம்மாசனம்

### திருவிளையாடல்

## பிட்டுக்கு மண் சுமந்தது

பிற்பகல் 03.05 மணிக்கு மேல் 03.29 மணிக்குள்
தனுர் லக்கனத்தில் மண்சாத்துதல்

வையையாற்றில் பெருக்கெடுத்த வெள்ளத்தை அடைக்க வீட்டிற்கொருவர் வர வேண்டும் என்று அரசர் ஆணையிட்டார். வந்தி என்னும் பிட்டு விற்கும் கிழவிக்கு ஒருவருமில்லை. இறைவனே கூலியாளாக வடிவெடுத்து வந்து, வந்தி தந்த பிட்டுக்காக மண் சுமக்கிறேன் என்று கூறினார். ஆனால் தன் பங்கு கரையை அடைக்காமல் பிட்டருந்தி, ஆடிப்பாடி, ஆழ்ந்த துயில் கொண்டார். பார்வையிட வந்த மன்னன் தன் கையிலிருந்த பிரம்பால் அவர் முதுகில் அடிக்க அனைத்து உலக உயிர்கள் முதுகிலும் அவ்வடிபட்டது. அரசன் உண்மை உணர்ந்தான். இறைவன் அசரீரியாக மாணிக்கவாசகர் பெருமையையும் வந்திக்கு சிவலோக பதவி தருவதற்காகவும், தாம் இவ்வாறு செய்வதாக மன்னனுக்கு உரைத்தார். மன்னனும் மாணிக்கவாசகரை இறைபணிக்கு விடுவித்து, தானும் சிவலோக பதவியை தக்க காலத்தில் அடைந்தான்.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

பிட்டுத்தோப்பில் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்கு
ம.முத்தம்பலமுதலியார் கட்டளை மண்டபம்,
திருவாதவூர் அருள்மிகு மாணிக்கவாசகசுவாமிக்கு
தானப்பமுதலியார் கட்டளை மண்டபம்.

### இரவு புறப்பாடு

இரவு 7.00மணிக்கு மண்டபத்தில் இருந்து புறப்பாடாகி ஆரப்பாளையம் ஆர்.காயம்பு பிள்ளையால் நடத்தப்படும் பெ.பொன்னம்மாள் மண்டபத்திற்கு எழுந்தருளி, பொன்னகரம், பிராட்வே மார்க்கமாக ஒர்க்ஷாப் ரோடு, வழியாக நாயக்கர் புதுத் தெரு, வக்கீல் புதுத் தெரு, கீழமாசி வீதி, அம்மன் சன்னதி வழியாக திருக்கோயில் சேர்தல்.

**வாகனம்– சுவாமி: வெள்ளி ரிஷப வாகனம் அம்மன்: வெள்ளி ரிஷப வாகனம்.**

ஆடக மதுரை அரசே போற்றி !! **பத்தாம் திருநாள்** கூடல் இலங்கு குருமணி போற்றி !!

## 03.09.2017 ஞாயிற்றுக்கிழமை (ஆவணி மாதம் 18-ஆம் நாள்)

புறப்பாடு பிற்பகலில்.

மாலை 04.30 மணிக்கு ஆவணி மூலவீதி, கோயிலுக்குள் திருக்கல்யாண மண்டபம்.
திரு.ஆர்.எம்.கிருஷ்ணமூர்த்தி நிர்வாக மேலாளர் திருவாளர்கள்.ஜெயகிருஷ்ணா ரிலிஜியஸ் டிரஸ்ட், திருமங்கலம், மதுரை. விறகு விற்ற லீலை மண்டகப்படிதாரர்



திருவிளையாடல்

## விறகு விற்றது

வரகுண பாண்டியன் ஆட்சி காலத்தில் ஏமநாதன் என்னும் புலவன் பாண்டியநாட்டிற்கு வந்தான். யாழ் வாசிப்பதில் வல்லவனான அவன் அரசன் முன் யாழ் மீட்டினான். யாழிசையில் மயங்கி அரசன் ஏமநாதனை பாராட்டினான். ஏமநாதனும், அவனது சீடர்களும் மிகவும் செருக்கடைந்தார்கள். பாண்டிய நாட்டில் என்னுடன் போட்டியிட யாராவது உள்ளார்களா? என ஆணவத்துடன் சவால்விட்டான். அவனை எதிர்த்து யாரும் போட்டியிட முன்வராத காரணத்தால், பாண்டிய மன்னன் அரசவை ஆஸ்தான வித்துவானான பாணபத்திரனை அழைத்து ஏமநாதனுடன் போட்டியிட பணித்தார். தெருவெங்கும் ஏமநாதன் சீடர்களின் யாழிசையைக் கேட்ட பாணபத்திரன் ஏமநாதனை வெல்லும் வழியறியாமல் சோமசுந்தரரை வேண்டி நின்றார்.

இறைவனும் ஒரு முதியவர் உருவம் கொண்டு விறகு விற்பவராக ஒரு யாழை எடுத்துக் கொண்டு ஏமநாதன் தங்கியிருந்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்து யாழினை வாசித்துக் கொண்டே பாடினார். அந்த தெய்வ கானத்தைக் கேட்ட ஏமநாதன் வெளியே வந்து விறகு விற்பவரை நீ யார்? என்று வினவ, அவரும் பாணபத்திரரால் வயோதிகர் என்று ஒதுக்கப்பட்ட ஆள் என்று கூறினார். ஒதுக்கப்பட்ட ஆளுக்கே இவ்வளவு திறமை என்றால் தன்னால் பாணபத்திரரை வெல்ல முடியாது என அஞ்சிய ஏமநாதன் இரவோடு இரவாக மதுரையை விட்டே சென்றான்.

இரவு புறப்பாடு: இரவு 08.00 மணி ஆவணி மூலவீதி,
வாகனம்– சுவாமி: தங்கச்சப்பரம் அம்மன்: தங்கச்சப்பரம்
இரவு திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்கும், திருவாதவூர் அருள்மிகு மாணிக்கவாசகர் சுவாமிக்கும் சப்பரம்.

ஆடக மதுரை அரசே போற்றி !!

**பதினொன்றாம் திருநாள்**

கூடல் இலங்கு குருமணி போற்றி !!

## 04.09.2017 திங்கட்கிழமை (ஆவணி மாதம் 19-ஆம் நாள்)

காலை புறப்பாடு
ஆவணி மூலவீதி, கோயிலுக்குள் திருக்கல்யாண மண்டபத்தில்
ம.முத்தம்பல முதலியார் கட்டளை மண்டபம்.



சப்தாவர்ணச் சப்பரம்

வாகனம்– **சட்டத்தேர்**

காலை 09.20 மணி முதல்
09.44 மணிக்குள்
துலா லக்கனத்தில் சட்டத்தேர்

இரவு புறப்பாடு :

இரவு 07.00 மணி ஆவணி மூலவீதி

வாகனம்– **சப்தாவர்ணச் சப்பரம்**

திருக்கோயிலின் சிறப்பு

அருள்மிகு சுந்ரேசுவரர் கருவறை விமானம் இந்திர விமானம் ஆகும். இது தேவதச்சனால் வடிவமைக்கப்பட்டு இந்திரனால் வழங்கப்பட்டதாகும். இதனை அஷ்டகஜவிமானம் எனவும் அழைப்பர். இவ்விமானம் 8 யானைகள், 32 சிங்கங்கள், 64 சிவகணங்களால் தாங்கப்படுகிறது.

இத்திருக்கோயிலின் ஒன்பது நிலைகொண்ட தெற்குக் கோபுரம் கி.பி.1529–ஆம் ஆண்டு சிராமலை செவ்வந்தி மூர்த்தி செட்டியாரால் கட்டப் பெற்றது. இத்திருக்கோயிலின் கோபுரங்களில் உயரம் அதிகம் கொண்ட கோபுரம் இதுவாகும்.

ஆடக மதுரை அரசே போற்றி !!

## பன்னிரண்டாம் திருநாள்

கூடல் இலங்கு குருமணி போற்றி !!

## 05.09.2017 செவ்வாய்க்கிழமை (ஆவணி மாதம் 20-ஆம் நாள்)



சுவாமி: வெள்ளி ரிஷப வாகனம்

கோயிலுக்குள் திருக்கல்யாண மண்டபம்.

## பொற்றாமரைக் குளத்தில் தீர்த்தவாரி

இரவு புறப்பாடு

மாலை 06.00 மணிக்கு திருக்கல்யாண மண்டபத்தில் கமுதி சத்திரிய நாடார்கள் உறவின்முறை திருக்கண் ஆகி, வடக்கு ஆடி வீதியில் உள்ள 16–கால் மண்டபம் சேர்தல்.

வாகனம்– வெள்ளி ரிஷப வாகனம்

இரவு திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியும், திருவாதவூர் அருள்மிகு மாணிக்கவாசகர் சுவாமியும் குதிரை வாகனத்தில் விடிவகையறா கொட்டகை திருக்கண்ணில் இறங்கி, வடக்கு ஆடி வீதியில் உள்ள 16–கால் மண்டபத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளுதல்.



அம்மன்: வெள்ளி ரிஷப வாகனம்

திருக்கோயிலின் சிறப்பு

இத்திருக்கோயிலின் ஒன்பது நிலைகொண்ட வடக்குக் கோபுரம் கிருஷ்ணப்பநாயக்கரால் தொடங்கப்பெற்று கி.பி.1878–ஆம் ஆண்டு வயிநாகரம் நாகப்பச் செட்டியார்–வேங்கடாச்சலம் செட்டியார் குடும்பத்தாரால் பூர்த்தி செய்யப்பட்டது. இதனை மொட்டைக் கோபுரம் என்றும் கூறுவர்.

ஆடக மதுரை அரசே போற்றி !! கூடல் இலங்கு குருமணி போற்றி !!

# ஆடக மதுரையில் ஆலவாய்ச் சொக்கர் அருளிச் செய்த அறுபத்துநான்கு அருளாடல்கள் (திருவிளையாடல்கள்)


## மதுரைக் காண்டம்

1. இந்திரன் பழி தீர்த்தது
2. வெள்ளையானை சாபம் தீர்த்தது
3. திருநகரம் கண்டது (மதுரை)
4. தடாதகைப் பிராட்டியார் திருஅவதாரம்
5. திருமணம் (மீனாட்சிசுந்தரேசுவரர்)
6. வெள்ளியம்பலத் திருக்கூத்து ஆடியது
7. குண்டோதரனுக்கு அன்னமிட்டது
8. அன்னக்குழியும் வைகையும் அழைத்தல்
9. எழுகடல் அழைத்தல்
10. மலயத்துவசனை அழைத்தல்
11. உக்கிரபாண்டியர் திருஅவதாரம்
12. உக்கிரபாண்டியருக்கு வேல், வளை, செண்டு கொடுத்தல்
13. கடல் சுவற வேல் விடுதல்
14. இந்திரன் முடிமேல் வளை எறிதல்
15. மேருவைச் செண்டினால் அடித்தல்
16. வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்தல்
17. மாணிக்கம் விற்றல்
18. வருணன்விட்ட கடலை வற்றச் செய்தல்



## கூடற் காண்டம்

1. நான்மாடக் கூடலானது
2. எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடல்
3. கல்லானைக்கு கரும்பருத்தியது
4. யானை எய்தது
5. விருத்த குமார பாலரானது
6. கால்மாறியாடியது
7. பழியஞ்சியது
8. மாபாதகம் தீர்த்தது
9. அங்கம் வெட்டியது
10. நாகம் எய்தது
11. மாயப்பசுவை வதைத்தல்
12. மெய்க்காட்டிட்டது
13. உலவாக்கிழி அருளியது
14. வளையல் விற்றது
15. அட்டமாசித்தி அருளல்
16. விடையிலச்சினை இடுதல்
17. தண்ணீர்ப்பந்தல் வைத்தல்
18. இரசவாதம் செய்தல்
19. சோழனை மடுவில் வீட்டியது
20. உலவாக் கோட்டை அருளியது
21. மாமனாக வந்து வழக்குரைத்தல்
22. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டல்
23. விறகு விற்றல்
24. திருமுகங்கொடுத்தல்
25. பலகையிட்டது
26. இசைவாது வெல்லுதல்
27. பன்றிக்குட்டிகளுக்குப் பால்கொடுத்தல்
28. பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்குதல்
29. கருங்குருவிக்கு உபதேசித்தது
30. நாரைக்கு முத்தி கொடுத்தது



## திருவாலவாய்க் காண்டம்

1. திருஆலவாயானது
2. சுந்தரப்பேரம்பெய்தல்
3. சங்கப்பலகை கொடுத்தல்
4. தருமிக்குப் பொற்கிழியளித்தல்
5. நக்கீரனைக் கரையேற்றல்
6. நக்கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தல்
7. சங்கத்தார் கலகம் தீர்த்தல்
8. இடைக்காடன் பிணக்குத் தீர்த்தல்
9. வலைவீசுதல்
10. வாதவூரடிகளுக்கு உபதேசம் செய்தது
11. நரிபரியாக்குதல்
12. பரியை நரியாக்கி வைகையை அழைத்தல்
13. பிட்டுக்கு மண் சுமத்தல்
14. பாண்டியன் சுரந்தீர்த்தல்
15. சமணரைக் கழுவேற்றியது
16. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்தல்



ஆடக மதுரை அரசே போற்றி !! கூடல் இலங்கு குருமணி போற்றி !!

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

## சேவைக்கட்டண விபரம்

| | |
|---|---|
| உபய வைரக்கிரீட சேவைக்கட்டணம் | ரூ.5001 /- |
| உபய திருக்கல்யாண உற்சவக் கட்டணம் | ரூ.1501 /- |
| தங்கரத புறப்பாட்டுக் கட்டணம் | ரூ.1501 /- |
| அம்மன் மற்றும் சுவாமி ஒருகால அபிஷேகக் கட்டணம் | ரூ.1300 /- |
| அருள்மிகு பத்ரகாளி, முக்குறுணி விநாயகர் அபிஷேகக் கட்டணம் ( சந்நிதி 1க்கு ) | ரூ.1000 /- |
| அருள்மிகு தட்சிணாமூர்த்தி, மகாலெட்சுமி, துர்க்கை, சரஸ்வதி போன்ற தெய்வங்களுக்கு அபிஷேகக் கட்டணம் ( சந்நிதி 1க்கு ) | ரூ.550 /- |
| அருள்மிகு தட்சிணாமூர்த்தி, மகாலெட்சுமி, துர்க்கை, சரஸ்வதி போன்ற தெய்வங்களுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்ய கட்டணம் ( சந்நிதி 1க்கு ) | ரூ.1000 /- |
| அருள்மிகு பத்ரகாளி, முக்குறுணி விநாயகர் போன்ற தெய்வங்களுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்ய கட்டணம் ( சந்நிதி 1க்கு ) | ரூ.2250 /- |
| சித்தர் சந்நிதி பூக்கூடாரச் சேவைக்கட்டணம் | ரூ.500 /- |
| முக்குறுணி விநாயகர் கொழுக்கட்டை நெய்வேத்தியம் | ரூ.15000 /- |

tnhrce.org

## அன்னதானத்திட்டம்

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட அன்னதானத்திட்டம் இத்திருக்கோயிலில் செயல்பாட்டில் உள்ளது. நல்ல சுகாதார முறைப்படி உணவு தயாரிக்கப்பட்டு வெளியூர் மற்றும் உள்ளுர் பக்தர்களுக்கு நண்பகல் 12.00 மணிக்கு பரிமாறப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பங்குகொள்ள விரும்பும் உபயதாரர்கள் கீழ்கண்டுள்ள விபரப்படி தொகை செலுத்தினால், அவரது பிறந்தநாள், திருமணநாள் மற்றும் முன்னோர்களின் நினைவு நாள் அல்லது உபயதாரர் குறிப்பிடும் நாள், இவற்றில் ஏதேனும் ஒரு நாளில் அன்னதானம் நடத்தப்படும்.

இத்திட்டத்திற்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானவரி சட்டப்பிரிவு ( 80-G ன்) கீழ் விலக்கு உண்டு

| திருக்கோயில் விபரம் | ஒரு நாள் அன்னதானம் செய்வதற்கு | வருடத்தில் ஒரு நாள் அன்னதானம் செய்வதற்கு (ஒரே முறை நிரந்தர வைப்பு செய்தல்) |
|---|---|---|
| அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை (300 நபர்கள்) | ரூ.7500 /- | ரூ.75000 /- |
| அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தெப்பக்குளம், மதுரை (100 நபர்கள்) | ரூ.2500 /- | ரூ.25000 /- |
| அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை (100 நபர்கள்) | ரூ.2500 /- | ரூ.25000 /- |
| அருள்மிகு திருமறைநாதர்சுவாமி திருக்கோயில், திருவாதவூர், மேலூர், மதுரை (50 நபர்கள்) | ரூ.1250 /- | ரூ.12500 /- |
| அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயில், தெப்பக்குளம், மதுரை (50 நபர்கள்) | ரூ.1250 /- | ரூ.12500 /- |

e-pooja — நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: — e-donation

**இணை ஆணையர் / செயல் அலுவலர்**

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை-625 001. தபால் பெட்டி எண்: 100

தொலைபேசி எண்கள்: அலுவலகம்: 0452 2344360 உள்துறை: 0452 2349868 பிரசாத தங்கும் விடுதி: 0452 2345503

Visitor Website: www.maduraimeenakshi.tnhrce.in Email: info@maduraimeenakshi.org

# சேவைக்கட்டளைகள்

## தங்கரத புறப்பாட்டு சேவை கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் தங்கரத புறப்பாட்டு சேவை கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள் அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## உபய திருக்கல்யாண சேவை கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் உபய திருக்கல்யாண சேவை கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள் அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## அலங்காரத் கலர்த்திண்டு மாலை நித்தய சாத்துப்படி கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அருள்மிகு மீனாட்சி அம்மனுக்கும், அருள்மிகு சுந்தரேசுவரர்க்கும் நான்கு பூஜைக்காலத்திலும் அலங்கார கலர்த்திண்டு மாலை நித்திய சாத்துப்படி கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது திருக்கோயில் மூலம் ரூ.25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## நெய் தீபக் கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அருள்மிகு மீனாட்சி அம்மனுக்கும், அருள்மிகு சுந்தரேசுவரர்க்கும் நெய் தீபம் ஏற்றும் கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்கு கொள்ள விரும்பும் உபயதாரர்கள் சந்நிதி ஒன்றுக்கு திருக்கோயில் மூலம் ரூ.25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## உச்சிகால இலவச பிரசாத நெய்வேத்திய கட்டளை

இத்திருக்கோயிலில் உச்சிகாலத்தின் போது அம்மனுக்குப் பிரசாதம் நெய்வேத்தியம் செய்து தரிசனத்திற்கு வரும் சேவார்த்திகளுக்கு வழங்க உச்சிகால இலவச பிரசாத நெய்வேத்திய கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## கால அபிஷேகம் மற்றும் பூஜை திட்டம்

இத்திருக்கோயிலில் அம்மன் சுவாமிக்கு ஒருகால அபிஷேகம் மற்றும் பூஜை திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது திருக்கோயில் மூலம் ரூ.25000/- முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும்.இக்கட்டளைக்கு நன்கொடையாளர் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## வலைதள சேவை

இத்திருக்கோயிலில் நடைமுறையில் உள்ள அனைத்து சேவைகளையும் திருக்கோயிலின் வலைதள முகவரியான www.maduraimeenakshi.org-ன் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம். நன்கொடைகள் மற்றும் சேவைக்கட்டணங்களை வரைவோலை மற்றும் காசோலை மூலமாகவும் செலுத்தலாம்.

## தகவல் வழிகாட்டி

இலவச ஒலிவடிவ தகவல் வழிகாட்டி, (Pinakin) இத்திருக்கோயிலில் செயல்பாட்டில் உள்ளது. **Free Audio Guide (Pinakin) is also available in this Temple.**


ஆடக மதுரை அரசே போற்றி !!
கூடல் இலங்கு குருமணி போற்றி !!
ஆயிரங்கால் மண்டபத்தின் எழிற்கோலம்

ஆடக மதுரை அரசே போற்றி !!

கூடல் இலங்கு குருமணி போற்றி !!

